எழுத்து மூலமாகவோ எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை என்று அறிக்கை அளித்துள்ளார். ஆயினும் இது பற்றி முழுமையாக விசாரணை நடத்தும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுவார்.

(ஈ) புதுக்கோட்டை மாவட்டத்தில் தட்டம்மை நோய் பரவியிருத்தல்

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " புதுக்கோட்டை மாவட்டத்தில் தட்டம்மை நோய் ஏற்பட்டுள்ளது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1987-ஆம் வருடம் சனவரி பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மூன்று மாதங்களில் தட்டம்மை (Measles) நோயினால் 26 நபர்களும், சின்னம்மை நோயினால் (Chicken pox) 34 நபர்களும் பாதிக்கப்பட்டனர். இறப்பு ஏதும் இல்லை. தட்டம்மை நோய் பரவாமல் இருக்க 10,000 நபர்களுக்கு மேல் தட்டம்மை தடுப்பூசி போடப்பட்டு, இதர தடுப்பு நடவடிக்கைகளும் மற்றும் கண்காணிப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்சமயம் நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது.

திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் தடுப்பு ஊசிகள் போடப் பட்டு இப்போது அம்மை நோய் பரவாமல் இருக்கிற அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அறந்தாங்கி ஒன்றியத்திலே மேற்புனைக்காடு, ஆயங்குடி, செட்டூர், திருவரங்கம் ஒன்றியத்தில் பலக்கவிடுதி, ஆலங்காடு, கொத்தமங்கலம், வேப்பங்குடி, திருக்கட்டளை ஆகிய பகுதிகளிலும், கரம்பக்குடி ஒன்றியத்திலேயும் பரவலாக அம்மை நோய் பரவி மக்கள் அவதிக்காளாகக் கூடிய நிலைமை இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே அம்மை நோய் கடுமையாக இருப்பதால் அனைத்துப் பகுதிகளுக்கும் அதிகாரி களை அனுப்பி தடுப்பு ஊசிகளைப் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்ட அத்தனை ஊர்களிலும் தடுப்பு ஊசிகள் போடுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும்.